Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] சாற்றுமானம்:- துன்முகிஇல தைமீ கட உ வெள்ளிக்கிழமை (25 JANY 1957) [இல-சுI]

## கண்டியிலும் ஐக்கிய தேசியக்கட்சி

கண்டி நகரசபைத் தலைவராக ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர் ஸ்ரீ ஈ. எல். சேனநாயகவும் உபதலைவராக அபேகட்சியைச் சேர்ந்த ஸ்ரீ ஏ. சி. எல். இறத்வத்தையும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## சுதந்திர நாள் துக்க நாள்

வருகிற மாசம் 4ந் திகதி (4-2-57) இலங்கையின் சுதந்திர நாளாகும். அந் நாள் துக்க நாளாகக் கொண்டாடப்பட வேண்டுமென்று யாழ்ப்பாணம் நகரசபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. குறித்த பிரேரணையை திரு. ஏ. துரைராசசிங்கம் பிரேரிகக, திரு. கே. வி. தேவேந்திரன் அனுவதித்தார்.

# சிங்கள சிறி எதிர்ப்பு இயக்கம்

## நாடெங்கும் நிகழ்ந்த சிறப்பு

## தொடர்ந்து நடத்துவதாகத் தீர்மானம்

தமிழ்த்தாயின் வயிற்றிற் பிறந்த எவருடைய சிந்தையும் நன்கு களிகூருமாறு "சிங்கள சிறி எதிர்ப்பு" இயக்கம் சென்ற சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று நிறைந்த சித்தி எய்தியது. அதிகாலையிலே யாழ்ப்பாண முற்றவெளி சனசமுத்திரமாகவே தோன்றியது. பல ஆண்டுகளாகப் பிரிந்து நின்ற தலைவர்கள் ஒன்று கூடி நின்ற காட்சி மக்கள் மனக்கிளர்ச்சிக்கு மின்சக்தியூட்டியுள்ளது. எதிர்காலத்தில் இன்றியமையாது வேண்டப்படும் தமிழினஒற்றுமைக்குச் சிங்கள சிறி எதிர்ப்பு இயக்கம் வித்திட்டுவிட்டது என்ற பேச்சு எங்கும் பரவி மக்கள் மகிழ்ச்சி மீதூர்ந்தவர்களாய் எங்கும் நடமாடினர். இயந்திர உந்துவண்டிகள் வந்து வந்து குவியத்தொடங்கின. ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாய்த் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றன.

திருவாளர்கள்: ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் முதலிடம் வகித்து நிற்ப, தமிழ் எழுத்துக்கள் பொறித்த யந்திர உந்து வண்டிகளின் ஊர்வலம் ஆரம்பமாயது. ஊர்வலம் இருகூறுகப்பிரிந்துசெல்ல, மக்களும் இரு பக்கங்களிலும் ஆற்றொழுக்குப்போல் இடையறாது அமைதியாகச் சென்றனர். பாடிகாவலர் பகுதியினரும் உந்து வண்டிகளின் இலக்கங்களைக் குறித்துக்கொண்டு நின்றனரே யன்றி அரசாங்க அதிகார முறையிற் பாதகமான செயல் எதையும் செய்யவில்லை. ஊர்வலத்தின் ஒரு பகுதி யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்குச் செல்ல, மற்றது யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி முதலிய பகுதிகளுக்குச் சென்றது. சென்றவிடமெல்லாம் சிறந்த வரவேற்புக் கொடுத்து நாட்டு மக்கள் பேரார்வம் காட்டினர். போனவிடமெல்லாம் மக்கள் திரண்டு நின்ற சிறப்பு எவருடைய உள்ளத்தையும் கவரத்தக்கதாயிருந்ததென்ற கருத்து எங்கும் பரவியுள்ளது. இவ்வியக்கம் எதிர்காலத்திலுமடையவிருக்கும் சித்திக்கு இந்நிலைமை ஓர் அறிகுறியாயிருக்கின்றதென்று இவ்வியகத்தில் ஈடுபட்டவர்கள் பலர்கூறுகின்றனர். இவை யாழ்ப்பாண நிகழ்ச்சிகள்.

மட்டக்களப்பு முற்றவெளியும் யாழ்ப்பாணத்துக் காட்சிக்கு இரண்டாவதல்ல என்று சொல்லக்கூடியளவு ஆர்வமிகுதிகாட்டியது எனபது பெருமகிழ்வுக்குரிய செய்தியாகும். மட்டக்களப்பு நகரத்திலுள்ள உந்து வண்டிகளில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமான வண்டிகள் இவ்வியக்கத்திற் பங்குபற்றின என்றல் அங்குள்ள மக்களின் ஆர்வமிகுதிக்குச் சான்று வேறு வேண்டப்படுமா?

திருவாளர்கள்: சி. வன்னியசிங்கம், எஸ். இராசதுரை, ஏ. எஸ். ரி. கனகசபை ஆகியோர் தலைமை தாங்கிச் செல்ல பல நூற்றுக் கணக்கான மக்கள் பின் தொடர்ந்து நகரம் முழுதையும் சுற்றினர்கள் சென்றவிடமெல்லாம் உற்சாகம் நிறைந்திருந்ததென்றும், அகில இலங்கை மாணவர் மன்றத்தார் இந்நிகழ்ச்சிகளிற் பெரிதும் ஈடுபட்டனரென்றும் குறிப்பிடப்படுகின்றது.

திருக்கோணமலையில் திருவாளர்கள் என். ஆர். இராசவரோதயம், ஏ. அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் தமிழ் இலக்கம் பொறிக்கப்பெற்ற உந்து வண்டிகள் பெருந்தொகையான மக்கள் இருமருங்கிலுஞ் செல்ல ஊர்வலமாகச் சென்றன.

இத் தொடர்பில் திரு. இராசவரோதயம் அவர்கள் பேசும்போது, இந்த அறப்போர் இன்றுடன் முடியமாட்டாது. இது தொடர்ந்து நடைபெறும். இன்று நம்மைக் கைதிகளாக்காவிட்டால் நாளைக்குச் செய்யக்கூடும். ஆகையினுலே நாங்கள் இதை நாளைக்கும் செய்தல்வேண்டும் என்றார்.

மன்னாரில் ஸ்ரீ ஏ. ஆர். ஜேம்ஸ் அவர்கள் தலைமையில தமிழ் எழுத்துக்களுடன் உந்து வண்டிகள் ஊர்வலமாகச் சென்றன. மிக அமைதியான முறையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

---

### மட்டக்கிளப்பு பட்டினசபைத் தலைவர்

மட்டக்கிளப்பு பட்டினசபைத் தலைவராக ஸ்ரீ ஏ. எஸ். ரி. கனகசபையும் உபதலைவராக ஸ்ரீ ஜேம்ஸ் சற்குணமும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பெற்றனர்.

அரசியல் அலை

# பொதுவுடைமைக் கட்சி புதுப்பாதையிற் செல்கின்றது

—:0:—

## மக்கள் மனத்தைப் புண்ணக்கும் ம. ஐ. மு. வுககு சின் ஆய்விட்டது!!

## மொழிக் கொள்கைக்கு விளக்கம் வேறு வேண்டியதில்லை......!

அரசியற் கட்சிகளின் அடிப்படை நோக்கம் ஆதிக்கத்தைப் பெறுவதென்பது • உண்மைதான். ஆனல் இதுதான் நோக்கம் என்று ஒருகட்சியும் சொல்லமாட்டாது. சொல்லாமற் சொல்லுவதற்குக் கூடக் கட்சிகளுக்கு வெட்கமாயிருக்கும். இருந்தும் அதிகார ஆசை பிடித்துவிட்டால் சொல்வதென்ன செய்வதென்ன என்று தெரியாமற் கட்சிகள் நிலை தடுமாறி ஈற்றிற் சுயரூபத்தைக் காட்டிவிடுவதுமுண்டு இந்த நிலையிலே வந்துவிட்டது பொதுவுடைமைக்கட்சி

இலங்கைப் பொதுவுடைமைக்கட்சிதான் இந்த விதமாக மனமாற்றங்கொண்டிருப்பதென்று சொல்லிவிடமுடியாது. உருசியநாட்டிலே ஸ்ராலினைப் போற்றிய தலைவர்களே தூற்றினர்கள். மறுபடி போற்றுகின்றார்கள் திரும்பவும் தூற்றாமல் விடுவார்களா என்று சொல்ல முடியாது.

ஈழத்துப் பொதுவுடைமைக் கட்சிக்கு இருந்தாற் போல ம. ஐ. முன்னணியிற் பெருவிருப்பும் அரசாங்க எதிர்க கட்சியில வெறுப்பும் தோற்றிய காரணமென்ன? தேர்தலுக்கு முன் ஒரு வேளை ம. ஐ மு. வுக்கும் பொதுவுடைமைக் கட்சிக்கும் சில நோக்கங்களில் ஒற்றுமைப்பாடிருந்ததென்றலும் பண்டாரநாயக ஆட்சி தொடங்கியதும் பொதுவுடைமைக் கட்சிக்கு முழு மாறனதென்று சொல்லக் கூடிய வகையில் அரசாங்கம் நடந்து வந்தது. மொழிக்கலகம், கல்லோயாக் கலவரம் என்ற வகையிலே பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற பின்பும் ம. ஐ. முன்னணியை ஆதரிப்பது சாலச்சிறந்ததென்று பொதுவுடைக்கட்சி நினைத்திருப்பதில் இரகசிய உண்மை உண்டு. காரியத்திற் கண் கொண்டு விட்டனர் பொதுவுடைமைத் தலைவர்கள்.

## கப்பற் செய்கை

இந்தியாவில் இரண்டாவதாக ஒருகப்பல் கட்டும்தளத்தைநிறுவுவதற்குபூர்வாங்கத்திட்டத்தை வகுப்பதற்காகத் தொழில் நிபுணர்கள் குழு ஒன்றை அனுப்ப பிரித்தானிய அரசாங்கம் முன்வந்ததை இந்திய அரசாங்கம் ஏற்றது. கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கம் இவ்வாறு உதவ உதவ முன்வந்திருக்கிறது.

எந்த வகையான கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படவேண்டும்; எவ்வளவு கப்பல்கள் கட்டலாம் என்பவைபற்றித் தீர்மானிப்பதற்காக மாகாண அமைச்சரவைப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுமை மத்திய அசசாங்கம் நியமித்துள்ளது.

—0—

### தமிழரின் சுதந்திரப் போருக்கு உதவி

—0—

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க ஆதரவில் நடந்த தைப்பொங்கல் விழாக்கொண்டாட்டக் கூட்டத்தில் தென் இந்திய திராவிடமுன்னேற்றக் கழக உறுப்பினர் ஸ்ரீ டி. கே. ஸ்ரீநிவாசன் அவர்கள் பேசும்போது சர்வ தேசச் சட்டத்திற்கும் மனிதவர்க்க நீதிக்கும் ஒப்ப இலங்கையிலே யுள்ள தமிழரின் சுதந்திரப்போராட்டத்திற்கு நமது கட்சி சாத்தியமான சகல உதவிகளையும் நல்கும் என்று எனது கட்சியின் சார்பில் நான் உங்களுக்கு உறுதிகூற விரும்புகின்றேன் என்று கூறினர்.

### சர்வகலாசாலைக் கல்வி

சர்வகலாசாலையில் கல்வி எந்தெந்த மொழிகளில் பயிற்றப்படுதல் வேண்டும் என்னும் கேள்விக்கு மறுமொழி காணும்பொருட்டு சர்வகலாசாலைச் சபையார் முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவைச் சந்தித்துப் பேசியபோது ஆங்கிலம் சிங்களம் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் 1960-ம் ஆண்டு தொடக்கம் கல்வி பயிற்றப்படும் என்று அவர் அறியச் செய்திருக்கின்றார்.

ஆனல் உத்தியோக மொழியான சிங்களமொழியைக் கற்பதற்கு மாணவர்க்கும் ஆசிரியர்களுக்கும் போதிய வசதி சர்வகலாசாலையிற் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஸ்ரீ தைமீ கஉ வ வெள்ளிக்கிழமை

## எள்ளி நகையாடினால் இயக்கம் நின்றுவிடுமா......?

‘சிங்களச் சிறீ’ எதிர்ப்பு தமிழினத்தின் உரிமைப் போராட்டம் என்ற உண்மையை அறிந்தும் அறியாதவர் போன்று வேடம் போட்டுப் பிரதமர் பண்டாரநாயக, தமிழகத் தலைவர்கள் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் அதி காலையில் ஆரம்பித்து வைத்த சாத்வீகச் சட்ட மறுப்பு இயக்கத்தை அரசாங்கம் அவதானிக்கமாட்டாது என்று கூறிப் பார்த்தும், அந்த எழுச்சி தொடர்ந்து வருவதைக் கண்டு பொறுமையோடிருக்க மனம் பொறுக்காது அதை ஒரு மடமைத்தனமான செயல் என்று எள்ளி நகையாடி இருக்கின்றாராம்.

உண்மை வழியில் நின்று உரிமைக்காகப் போராடுகின்றவர்கள் இகழ்ச்சியால் நாணமடையார் ஏச்சினால் கோபாவேசங் கொள்ளார். எதிர்ப்பினால் மனந் தளரார். கருமமே கண்ணாயிருக்கும் தொண்டர்கள் எவ்வேவர் தீமையும் மேற்கொள்ளாது எடுத்த பணியைத் தொடுத்து முடிக்கும் உண்மை ஆற்றல் உள்ளவர்கள் என்பதை முதல் அமைச்சர் நன்றாக அறிதல் வேண்டுமென்று நாம் அவருக்குப் புத்தி புகட்டுகின்றோம்.

சிங்கள இனத்திற்கோ அன்றி அவர்களின் மொழிக்கோ பங்கம் விளைவிக்கும் நோக்கமாக எழுந்த இயக்கம் அல்ல இப்பொழுது தமிழ் பேசும் மக்கள் ஆரம்பித்திருக்கும் எதிர்ப்பு. தொன்றுதொட்டு நிலவி வந்த நிலைமையை மாற்றி ஒருமொழியை உயர்த்தி மற்றைய மொழியைத் தாழ்த்தி வைக்கும் தனிச் சிங்களச்சட்டம் என்னும் பொல்லாங்கை இல்லாதகற்றுவதற்காகத் தோன்றிய இந்த இயக்கத்தை உண்மையான அரசியல் அறிஞர்கள் ஒருபொழுதும் இகழவோ எள்ளி நகையாடவோ துணியமாட்டார்கள்.

விசைவண்டிகளிலே வழமையாக உள்ள இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு பொதுவழியை விடுத்து ஆதிக்க வெறியின் ஆர்ப்பாட்டத்தால் சிங்கள எழுத்தைப் புகுத்தத் துணிந்த அரசாங்கம் அம்மொழியை அறியாத இலட்சக் கணக்கான மக்கள் மனத்தில் எழுச்சியையும் புகுத்தியிருக்கின்றார்கள் என்பதைப் பிரதமர் அறிந்திருந்தால் இந்த விதமாகப் பித்து மொழிகளைப் பிதற்றி இருக்கமாட்டார். இலக்கத் தகடுகளிலே எண்களுக்குமுன் அடையாளக்குறி இருப்பது அவசியம் என்பது உண்மை. அப்படியானால் மரம் பறவை முதலியவற்றைக் குறிப்பிடும் அடையாளங்களாக்கியிருக்கலாமே. பொதுத் தேர்தலிலே வாக்காளர்களின் வசதிக்காக இம்முறையே கையாளப்படுவதை யாவருமறிவர். அவ்வாறில்லாமல் ஒரு இனத்தை ஒரு மொழியை எது விதத்திலும் இந்த நாட்டில் மானபங்கப்படுத்தி இல்லாதொழிப்பதற்காகச் சூழ்ச்சி செய்து தனிச்சிங்களச் சட்டத்தைக் காலத்துக்குக் காலம் நடைமுறையிற் கொண்டுவந்து மக்களைமாயமாக அடிபணியச் செய்துவிடலாம் என்று எண்ணிவிட்டார் பிரதமர். இந்த எண்ணந்தான் மடமையானது என்று அவருக்கு எடுத்துக் காட்டுகின்றோம். சிங்களச்சிறீயை எதிர்க்கும் இயக்கம் மதியின் பாற்பட்டதுமன்றி ஒழுக்க விதிக்கும் முரணாகாததென்றும் இடித்துரைக்கின்றோம்.

சூழ்ச்சியேயுருவெடுத்த துரியோதனனும் தம்பிமாரும் பஞ்சபாண்டவர்களைப் பலப்பல விதமாக மாயமாய்த் தோற்கடிக்க முயன்றும் உண்மையே ஈற்றில் நிலைநாட்டப் பெற்றது போல இந்த உரிமைப் போராட்டத்திலும் ம. ஐ. முன்னணியாரும் அவர்களுக்குப் பின்னணியிலே நிற்கும் ஆங்கிலச் செய்தித்தாள்களும் தமிழகத்தலைவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒருமுகமாய் இருக்கும் நிலைமையைக் கண்டு உள்ளமுடைந்து அன்னார் வேற்றுமைப்பட்டிருக்கின்றார்கள் என்று விபரீதச் செய்திகளை வெளியிட்ட பொழுதிலும் உண்மையை மறைக்க முடியாதாகையால் இந்த இயக்கம் வெற்றி பெறுவது உண்மையே.

# சிங்கள ‘சிறீ’

## இரண்டாம் நாள் எதிர்ப்பு

—:0:—

## தொண்டர்களுக்குத் தலைவர்களின் அறிவுரை

சிங்கள சிறீயை எதிர்க்கும் முறையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கம் ஒரு நாளில் மாத்திரம் நடைபெற்று முடிவதால் அரசாங்கம் எதிர்நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இச் சட்ட மறுப்பு இயக்கம் தொடர்ந்து நடைபெறுமானால், சட்டத்தை மீறுவோர் தண்டிக்கப்படுவர் என்றும், முதல்மந்திரி திரு. பண்டாரநாயக வெளியிட்ட கருத்தை அறிந்த சட்ட மறுப்பு இயக்கத்தார், தங்கள் எதிர்ப்பை இரண்டாம் நாளும் காட்டினர். முதல் நாள் போலவே இரு தமிழ் மாகாணங்களிலும் யந்திர உந்து வண்டிகள் தமிழ் எழுத்துக்களுடன் ஊர்வலமாகச் சென்றன. முதல் நாள் போலவே வண்டிகளின் இலக்கங்கள் பாடிகாவலராற் பதியப்பட்டன. இம் முறை வழக்குத் தொடரப்படுமென்பதாகக் கூறப்படுகின்றது.

திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகமும், ஜீ. ஜீ. பொன்னம்பலமும், சட்ட மறுப்பு நிகழ்ச்சிகள்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதன் சாரம் இங்கே காணவருகின்றது. “எங்கள் வேண்டுகோளின்படி சட்ட மறுப்பு இயக்கத்திற் பங்குபற்றி அதைச் சிறப்பாக நடத்தியதற்கு எங்கள் நன்றியறிதலைத் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கின்றோம. அரசாங்கத்தின் பயமுறுத்தலைக்கண்டு சனிக்கிழமை பிற்பகல் நாங்கள்கூடித் தீர்மானித்தபடி முதல மந்திரிக்கும் பாடிகாவலருக்கும் அறிவித்தல் கொடுத்து ஞாயிற்றுக்கிழமையும் தமிழ் எழுத்துக்கள் பொறித்த வண்டிகளைப் பாடிகாவலர் நிலையம் கச்சேரி முதலியவற்றின் முன்னுக்கு ஊர்வலமாகக் கொண்டு சென்றோம். சட்ட மறுப்பிற் பங்குபற்றும்தொண்டர்கள் இதனால் வரக்கூடிய விளைவுகளை மனத்தில் வைத்துக் கொண்டே சட்ட மறுப்புச் செய்ய வேண்டும். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் சட்ட மறுப்புச் செய்ய முடியாதவர்கள் விசேட நாட்களிற் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.”

### சட்டமறுப்பு ஆயக்கத்துக்குத் தடையாம்

சிங்கள சிறீச்சட்ட மறுப்பு இயக்கம் ஓய்ந்து விட்டதாகச் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் இவ்வியக்கம் தொடர்ந்து நடைபெறுவதாகப் பிற செய்திகளும் வெளிவருகின்றன. சட்ட மறுப்பு இயக்கத்தின் முதலாம் இரண்டாம் நாட்களில் பெருந் தொகையினர் ஒன்றுகூடித் தொடங்கிய இயக்கம் இப்பொழுது தனிப்பட்ட முறையில் நடப்பதாக அறியவருகின்றது. பல யந்திர உந்து வண்டிகள் நிலையான தமிழ் எழுத்துக்களுடன் உலாவுகின்றன.

இந்நிலைமை தொடர்ந்து நிலைக்குமானால் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக கூறினராம்.

தமிழிசை மணியின்

# அறுபதாம் ஆண்டு விழா

## ஆதரிக்குமாறு வேண்டுகோள்

தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இன்று எதிரொலிக்கும் ஒரு பாட்டு “தனித்திருந்து வாழும் மெய்த் தவமணியே” என்பது. அதில் ‘வெண்ணீறணிந்ததென்ன? வேலைப் பிடித்ததென்ன?” என்ற சரணத்தை ஸ்ரீமதி கே. பி சுந்தராம்பாள் அவர்கள் தமமுடைய எடுப்பான குரலில் பாடும்போது கேட்போர் அவ்வளவுபேரும் கைதட்டி மகிழ்வதைப்பார்த்திருக்கிறோம். இந்தக் கீர்த்தனத்தைப் பாடியவர் இன்னார் என்பது பலருக்குத் தெரியாது. யாருக்குமே தெரியாது என்றுகூடச் சொல்லலாம்:

இந்த அருமையான கீர்த்தனத்தையும் ‘வழி காட்டும் தெய்வம் கண்டேன்”, “தத்துவம் என்ன சொல்வாய்” “ஒய்வு நாளிலே” “திருட்டுக் குலத்தினிலே” முதலிய நாற்றுக் கணக்கான கீர்த்தனங்களையும் பாடிய அந்தச் சாகியகர்த்தாவின் பெயர் ஸ்ரீ C. N ஆதிசேஷையர் என்பதேயாகும். இவர் சேலம் ஜில்லாவில் ஆத்தூருக்கு அருகில் ‘ஆனையாம்பட்டி’யில் வசிக்கின்றார்.

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் அவருடைய திறமையை உணர்ந்து தம் அருட் பார்வையால் பார்த்துத் தமிழ்இசை மணி என்ற பட்டத்தை 1947ம் வருஷம் இவருக்கு வழங்கினார்கள். இத்தகைய அரியகீர்த்தனங்களை இயற்றிய “தமிழிசைமணி” இன்று நம்மிடையே வாழ்கிறார் 1957ம் ஆண்டு தைமீ ஜனவரி 10ம் தகதி இவருக்கு அறுபதாமாண்டு நிறைவடைந்துள்ளது.

இவ்வளவு காலமாகப் பிறர் கண்ணில் படாமல் ஒதுங்கியிருந்து தம் கீர்த்தனங்களைத் தமிழுலகுக்கு வழங்கிவரும், இந்தச் சாகித்திய சிகாமணியைத் தக்கமுறையில் பாராட்டிப் போற்றுவது தமிழர் கடமை. அதற்கு ஏற்ற சந்தர்ப்பமும வந்திருக்கிறது.

“தமிழிசைமணி” ஸ்ரீமான் ஆதிசேஷையவர்களுடைய கீர்த்தனங்கள் எல்லாம், புத்தக உருவில் வெளிவர வேண்டும். இது வரையில் வராமல் இருந்ததே பெருங்குறை. அவற்றை வெளியிட இது ஏற்ற சமயம். இவற்றையெல்லாம் எண்ணித் தமிழிசை மணியின், அருமை யறிந்த அன்பர்களிற் சிலர் இந்த அறுபதாண்டு நிறைவு விழாவைத் தக்க வகையில் கொண்டாடவேண்டுமென்று கருதி தமிழ்நாட்டில் ஒரு குழுவையும் அமைத்துக் கொண்டார்கள்.

“தமிழிசை மணியின்” கீர்த்தனங்களை வெளியிடுவது, அவருக்கு ஒரு பொற்கிழி வழங்குவது, சிறப்பான முறையில் பெருங் கூட்டம் கூட்டிப் பாராட்டுவது முதலிய நிகழ்ச்சிகள், அறுபதாண்டு விழாவின் அங்கமாக இருக்கும்.

1955-ம் ஆண்டு தமிழிசை மணி C. N. ஆதிசேஷயர் அவர்கள் “திருப்புகழ் பாடும்” குழுவினருடன் கதிர்காமயாத்திரை வந்து பின் இலங்கையின் பல இடங்களுக்கும் சென்று பலமேடைகளில்தமது அருளிசை பரப்பிச் சென்றார்கள் என்பதை இங்கு ஞாபகமூட்டுகிறோம்.

“தமிழிசை மணி” யின் பெருமையை உணர்ந்தவர்களும், அவரை அறியாமலே அவர் கீர்த்தனங்களில் ஈடுபட்டவர்களும், முருகன் அடியார்களும், தமிழன்பர்களும், தமிழ் இசையில் கருத்துடைய பெருமக்களும், இசைப்பாடல்களின் நயம் தேரும் இரஸிகர்களும், தங்கள் தங்களால் இயன்ற அளவு பொருள் வழங்கித் தமிழ் இசைக் கருவூலத்தில் தம்முடைய் இசைப்பாடல்களாகிய மணிகளைக் குவித்து வைத்த இப்பேரறிஞர்களுடைய அறுபதாண்டு நிறைவு நிழாவைச் சிறப்பாக நடைபெறும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இலங்கையில உள்ள அன்பர்கள் தங்கள் அன்பளிப்புகளை 1-3-57க் கிடையில் நம்மிடம் அனுப்பி வைத்தால் அதை ஒன்று சேர்த்து தமிழிசைமணி C. N. ஆதிசேஷயர் அவர்களுக்கு தங்கள் விலாசத்துடன் அனுப்பி வைக்கிறோம் என்று கேட்டுநிற்கின்றார்

திரு. சி.க. வேலாயுதபிள்ளை
சர்வோதய ஆசிரமம்
நீர்வேலி.

### தமிழ்ச்சர்வகலாசாலைக்கு மறுப்பு

பேராசிரியர் ஸ்ரீ A. W. மயில்வாகனம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கத்தினர் தமிழ்ச சர்வகலாசாலை ஒன்று அமைப்பது பற்றி முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவுடன் பேச்சுவார்த்தை நடத்தினரென்றும் அவ்வெண்ணத்துக்கு ஆதரவு கொடுக்க ஸ்ரீ பண்டாரநாயக மறுத்துவிட்டாரென்றும் அறியவருகின்றது.

# தமிழ்த் தாய் வணக்கத்துக்கு இல்லத்தில் இடம்

## சிங்கள மக்களின் கொடுமையை விளக்கத் திருக்குறள்மொழிபெயர்ப்பு

### தமிழ்விழாவில் காதி எம். எம். சுல்தான் அவர்களின் உணர்ச்சி மிகுந்த முழக்கம்

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் நடந்த தமிழ் விழாவிலே யாழ்ப்பாண நகரசபையின் பழைய தலைவர் காதி எம். எம். சுல்தான் அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது ஒவ்வொரு தமிழ் மகனும் கடவுள் வழிபாட்டிற்காகத் தனது இல்லத்தில்ஓர் அறையினை ஒதுக்கி வைப்பது போல், இன்னொரு அறையினைத் தமிழ்த்தாய் வணக்கத்திற்கென வைத்திருத்தல் வேண்டும். அவர்களது மனமும் இதயமும் தாயின் உறைவிடமாகத் திகழ வேண்டும். தமிழ் மொழிக்குச் சிங்கள மக்கள் செய்யும் கொடுமைகளை விளக்கிக் காட்டும் வண்ணம் முழு உலகிலேயே இணையற்று விளங்கும் திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து ஒவ்வொரு சிங்களவர் கையிலும் கொடுக்கவேண்டும். எமது மொழிக்கு மேலும் கொடுமை விளையா வண்ணம் தமிழர் இதனைச் செய்யவேண்டிய சிங்களவரையும் கவரவல்ல முறையில் தமிழ்க் கல்வி வளர வகைசெய்தல் வேண்டும்". இத் தினத்தை எனது வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாது இத்தகைய தமிழ் விழாவிலே முஸ்லிம் ஒருவரைத் தலைமை வகிக்க அனுமதித்ததால் பெரும் உண்மையொன்று புலனாகின்றது. தமிழ் ஒருமதத்தினருக்கோ ஒரு பிரத்தியேக பிரிவினருக்கோ மட்டும் உரியதொன்றல்ல. தமிழ் மொழிக்கு உரித்தான பண்டைப் பெருமை வாய்ந்த பண்பினைப் பின்பற்றும் எவருக்கும் தமிழ் உரியது என்ற வாய்மை வெளியாகின்றது. தமிழ்ப் பிரியன் என்ற முறையிலும், தமிழ்த் தாயின் மேல் அளப்பரிய பக்தி கொண்டவன் என்றமுறையிலும் இவ்விழாவில் தலைமைவகிப்பதையிட்டு நான் இறும்பூதெய்துகின்றேன்.

இன்று இந் நாட்டிலே எமது மொழியின் நிலையைக் கண்டு நாம் கலங்குகின்றோம். தமிழ் மொழியின் ஆற்றலையும், அதன் இலக்கிய வளத்தினையும் தமிழர்களே அறியாதிருப்பது தான் இதன் காரணம். தமிழர் இதனை உணர்ந்து தமது மொழிக்கு வேண்டிய உயரிய இடத்தினைக் கொடுத்திருப்பார்களாயின் இத்தகைய நிலை இன்று ஏற்பட்டேயிராது என்று கூறினர்.


# சி. வி. பாட்

( C. V. BHATT )

218, 220 கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்

ஷெல் மார்க் சுத்தமான அலுமினியம்

சுத்தமான இங்கிலிஸ் அலுமினியத்தில் உன்னத தயாரிப்பு. எளிதில் கறுக்காது. நீண்ட காலப் பாவனைக்கு உத்தரவாதமானது.

எவ்வித பாவனைக்கும் தொகைக்கும், சில்லறைக்கும் அலுமினியப் பாத்திரங்களும், மற்றும் பித்தளை, செம்பு, எவர்சில்வர், எனமல் சாமான்களும், கண்ணாடிச் சாமான்களும், லாப்புகளும், சிம்னிகளும், கோவில்பட்டுக்குடைகளும் மற்றும் பல சாமான்களும் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.


# வியாவிற்சைவபரிபாலன வித்தியாலயம

—————:0:—————

## பரிசளிப்பு விழாவும் பிரிவுபசாரமும்

இவ் வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்புக கொண்டாட்டமும், கைத்தொழிற் பொருட் காட்சியும் நிகழும் துன்முகி வருடம் மார்கழி மாதம் க0, ககம் (27, 28-12-56) தேதிகளில் மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்றன. வியாழக்கிழமை (27ந் தேதி) கைத்தொழிற் பொருட் காட்சியைக் கோப்பாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு மு. சுவாமிநாதன் அவர்கள் எம் நாட்டில் கைத்தொழில் வளர வேண்டிய அவசியம்பற்றி விரித்துரைத்துத் திறந்து வைத்தார்கள். பின் ஸ்ரீமதி வள்ளிப்பிள்ளை அவர்கள் கைத்தொழிலை விருத்திசெய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சிறந்த சொற்பொழியாற்றினர். பெருந்திரளான மக்கள் காட்சிக்குச் சமுகமளித்தனர். வித்தியாலய அதிபரின் நன்றியுரையுடன் காட்சி முடிவுற்றது.

அடுத்த நாள் 28-12-56 மாலை வித்தியாதரிசகர் எஸ். தியாகராசா அவர்கள் தலைமையில் பரிசளிப்புக் கூட்டம் ஆரம்பமாயது தலைமையாசிரியரின் அறிக்கை வாசிக்கப்பெற்றது பண்டிதர் இராமசாமி அவர்களின் பாரியார் ஸ்ரீமதி இலட்சுமிப்பிள்ளையவர்கள் பரிசுகளை வழங்கினர். வித்தியாதரிசினி ஸ்ரீமதி மதியாபரணம B. A. அவர்கள் பெண்களும் குடும்பக் கலையும் என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு, சிறந்த சொற்பொழிவுசெய்தனர்.

அடுத்தபடியாக, பாடசாலைத் தலைமையாசிரியராயிருந்து ஓய்வு பெறும் பண்டிதர் அவர்களது பிரியாவிடைக்கூட்டம் ஆரம்பமாயது. தலைவரவர்கள் இளைப்பாறும் ஆசிரியரின் சிறப்பியல்புகளை கூறிய பின், வித்தியாலயத்தாராலும், மாணவ மாணவிகளாலும் பிரிவுபசாரப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. சைவத் திருவாளர் திரு. கு. சுப்பிரமணியம் அவர்கள் உவந்தளித்த "பாக்கர் பவுண்டின" பேனவும், பண்டிதர் பொ. இராமுப்பிள்ளை அவர்கள் உவந்தளித்த பட்டுப் போர்வையும பரிசாக அளிக்கப்பட்டன. வேறு ஞாபகப் பரிசுகளும் அளிக்கப்பட்டன. பின, பேராசிரியர் அவர்களின் குண நலங்களைப் பாராட்டிச் சொற்பெருக்குகள் நடைபெற்றன. இடையிடையே மாணவர் அப்பியாசங்களும் நிகழ்ந்தன பண்டிதரவர்கள் நன்றி கூறிய பின் திருவாளர் கதிரவேலு அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

——

# சமய தாபகர்கள் யாவரும் ஆசியாவில் தோன்றினர்

————0————

# இன்று ஆசியாமீதுள்ள புனிதகடமை

## ஆசிய எழுத்தாளர் மகாநாட்டில் கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் கூறிய சில கருத்துக்கள்

——————0—0——————

தெல்கிமாநகரில் நடந்த ஆசிய எழுத்தாளர் மகாநாட்டிலே கலைப்புலவர் ஸ்ரீ கே. நவரத்தினம் அவர்கள் பேசும்போது ஒரு நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி அந்நாட்டின் பாரம்பரியமான கலாசார அத்திபாரத்திலேயே கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலும் அவ்வாறு நடப்பதையே நாம் காண்கின்றோம் என்று வலியுறுத்தினார்.

அவர் மேலும் பேசும்போது இஸ்லாமியகலாசார வருகையுடன் இந்தியாவில் கலாசார மயக்கம் உண்டாயிற்று. இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியுடன் அது தொடங்கியது.

சைவம் பௌத்தம் ஆகிய சமயங்கள்மூலமாய்த் தென்கிழக்காசிய நாடுகளில் இந்திய கலாசாரம் பரவியிருப்பதை அந்நாடுகளின் சமூக பொருளாதார முறைகள் சமயத் தாபனங்கள், கலைச் சின்னங்கள் முதலியவை மூலம் காணலாம். கலாசாரம் சமயம் ஆகியவை பரப்பும் இயக்கம அசோகனால் ஆரம்பிக்கப்பட்டு எல்லா ஆசிய நாடுகளிலும் பரவி, ஒரு பொதுக் கலாசார வாழ்வை அது எங்கும் உண்டாக்கியுள்ளது. மேற்கு வல்லரசுகள் ஆசியாவை ஆக்கிரமித்த பின்பு ஆசிய கலாசாரம் குலைந்து விட்டது. ஐக்கிய ஆசியா ஒன்று மீண்டும் உருவாக வேண்டுமானல் ஆசியாவின் பல நாடுகளிலும் பரவியுள்ள பொதுவான பண்பாட்டின் அம்சங்களின் உறுதியான அடிப்படையிலேயே நாம் அதைச் செய்யக்கூடும்.

நவீன விஞ்ஞான முறையில் இன்று அறிவு பரவியதால் ஆசியாவின் பாரம்பரியமான ஆன்மார்த்தத் துறையில் முன்னேற்றமில்லாது குறிப்பிட்ட சில அறிவுத் துறைகளில் முன்னேற்றமுண்டாயிருக்கின்றது. மேற்கு நாடுகளின் முன்னேற்றத்துக்குத் தக்கபடி எங்கள் நாடுகளும் முன்னேற வேண்டுமென்ற ஆசை ஆசியமக்கள் மனங்களில் இடம் பெற்றுவிட்டமையால் பழையபாரம்பரியமான கலாசாரத்தைக் கைவிடும் தன்மை மனத்தில் வேரூன்றிவிட்டது. இத் தகைய தன்மை வளர்தல் தடுக்கப்படுதல் வேண்டும்.

புனர் வாழ்வு பெறத் துடிக்கும் ஆசியா தனது சயய சமூக கலாசாரப் பிரச்சினைகளை நோக்கி அவற்றை மாற்றுதற்கு வழி காண வேண்டியதவசியமாகும். தேசத்தை விழிப்படையச் செய்யும் புனித கடமை எழுத்தாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் உரியது.

எங்கள் கலாசாரத்தின் புனிதத் தன்மையை வீசிவிடக்கூடாதென்பது உண்மையே. ஆனல் எங்கள் உண்மையான முன்னேற்றத்துக்கு உதவாத கொள்கைகளைக் கட்டித் தழுவி நின்றழுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமற்ற செயலாகும். ஒவ்வொரு இனத்தையும் அதன் பண்பாட்டையும் பாதுகாத்துவரும் தாபனங்களை நாம் எங்கள் வருங்கால வேலைத் திட்டங்களில் இணைத்துக் கொள்ளலாம். மனிதர் எல்லோரினதும் கூட்டுறவு வாழ்க்கையாகச் சமூக வாழ்க்கையமைதல் வேண்டும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# மாணுக்கர் மதிவள மன்றம்

**திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமண சபை**

சபையிலே ஒரு சம்பாஷணை.

ஐயர், "பெரியோர்களே! இவ்வாரூரன் எனக்கு அடியவன் என்ற ஓலையைக் கிழித்துவிட்டு வந்திருக்கின்ருன்.

பிராமணர்கள்: பிராமணர்கள் அடிமையாதல் உலகத்தில் இல்லை. என்ன தப்பு வார்த்தை சொன்னீர்.

ஐயர்: இது பொய் வழக்கல்ல. முழுதும் உண்மை. கிழித்த ஓலை இவன் பாட்டனும் அவன் மரபினரும் எழுதித்தந்த அடிமை ஓலை.

பிரா: சுந்தரரைப் பார்த்து) ஓலை உண்மையானல்—கிழித்துவிட்டால் வெற்றி கிட்டுமா? உமது எண்ணம் என்ன?

சுந்: சாத்திரங்கள் உணர்ந்த மகான்களே! நான் ஆதிசைவன் என்பது நீங்கள் அறிந்ததே. அங்ஙனமாக இவர் இப்படிச்சொன்னல் ... .... நாமொன்றுமறியோம். இது ஒரு மாயை.

பிரா: (ஐயரை நோக்கி) உமது விவகாரத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கு அநுபவம்—இலிகிதம் — சாட்சி மூன்றும் வேண்டும். முன்றில் ஒன்ருயினும் காட்டும்.

ஐயர்: இங்கேயிருக்கிறது. இது இவன் கிழித்த மூலவோலையைப் பார்த்தெழுதிய படியோலை.

பிரா: எங்கே அதைக் காட்டும்.

ஐயர்: அதையும் கிழியாதபடி செய்யின் காட்டுவேன்.

பிரா: நாங்கள் கிழிக்க விடோம்.

கரணன்: (ஓலையை வாசிக்கிருன், "திருநாவலூர் ஆதிசைவன் ஆரூரனுகிய நானும், என் சந்ததியாரும், திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு வழிவழித் தொண்டுசெய்ய உடன்பட்டு எழுதிக் கொடுத்த அடிமை யோலை. இப்படிக்கு ஆரூரன்.

பிரா: சாட்சிகளும் ஒப்புக்கொண்டன. சரி "இது உமது பாட்டனெழுத்துத் தானே பாரும்.

ஐயர்: பாட்டனெழுத்தைப் பார்த்தறியும் சக்தியுளனே இவன்! வேண்டுமாயின் பாட்டனது வேறு கைச்சாத்தை ஒப்புநோக்கினல் உண்மை வெளிக்கும். (பார்த்து ஒப்புக் கொண்டார்).

பிரா: நீர் தோற்றுப் போனீர். தொழும்பு செய்யப் போம்.

சுந்: விதிவசம் இதுவானல் அதனை விலக்குதல் முடியுமோ?

பிரா: (ஐயரை நோக்கி) ஐயரே. ஓலையிலே எமது ஊரே உமது ஊராகக் காணப்படுகின்றது. எங்கே உமது வீடு. நிலபரம் எல்லாம் காட்டும் பார்க்க.

ஐயர்: இத்தனை விருத்தரில் எவரும் அறியீரேல் காட்டுகிறேன் வருக, என்று திருவருட்டுறையுட் சென்ருர். பின்னர் ஆளைக் காணவில்லை.

**எதனை அறிவேன் எப்படிப் பாடுவேன்**

அடிமைகொண்டவர் உள்ளே புகுந்தார். காணவில்லை. சுந்தரர் தொடர்ந்து கூப்பிட்டார். அப்பொழுது "திருக்கைலாசத்தில் தந்த வாக்கின்படி தடுத்தாட்கொண்டோம்" என்று ஒரு திருவாக்கு எழுந்தது. எழுந்ததுதான். சுந்தரர் விழுந்தார், எழுந்தார். "சுவாமீ! உமது கருணையை என்னென்பேன்" என்ருர். "நீ வன்சொற்கூறி என்னுடன் வன்ருண்டன் ஆனய்! நாம் விரும்புவது பாடலேயாம். ஆதலால் நம்மீது தமிழ்ப் பாக்களைப் பாடு" என்னச், சுந்தரர், எதனை அறிவேன் எப்படிப் பாடுவேன்" என்ருர்.

"முன்னே என்னைப் பித்தன் என்ருய். "பித்தா" என்று பாடுஎனப், "பித்தா பிறைசூடி" என்று பாடியருளினர். "தொண்டனே இன்னும் பலவகையாக நம்மைப் பாடு" என்று பரமன் மறைந்தருளினர். விவாகம் தடைப்பட்டது. சடங்கவி புத்திரி சுந்தரரையே எண்ணி எண்ணி இருந்து சிவகதியடைந்தார்.

மாணவர்களே! இது வரையும் பெரியபுராணம் என்ருல் என்ன? அதன் வரலாறு—நாயன்மார் வரலாறு—சுந்தரர் அவதாரம் இளமைப் பருவம்—விவாக நாளில் இறைவனுற் றடுத்து ஆட்கொள்ளப்பட்டமை என்பனபற்றி நன்கு அறிந்துகொண்டீர்கள். அடுத்த பாடத்தில் நாயனர் யாத்திரை புரிந்த தலங்கள் பற்றும் ஆங்காங்கு நடந்த அற்புதச் செயல்கள் பற்றியும் படிப்போம்.

வணக்கம்.

[வளரும்]

# இலங்கைத் தமிழருக்கு வரவேற்பு

---:0:---

## பாரதி தமிழ்ச் சங்கத்திற் சொற்பொழிவுகள்

ஆசிய எழுத்தாளர் மகாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு கா. பொ. இரத்தினம் அவர்களுக்கு 3-1-1957 ல் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் வரவேற்பளித்தது. அத்தருணம் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கம் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்த வருவதைப் பாராட்டிப் பேசினர்.

அவர் தொடர்ந்து பேசும்போது எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒருவன் அந்த நாட்டு மக்களிடம் பழகி அவர்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்து அவற்றின்படி நடந்தபோதிலும், தன்னுடைய நாட்டிலே வசிக்கும் குடும்பத்தார்களின் நலனை மறவாது அவர்களுடைய செம்மையான வாழ்விற்காக தன்னலியன்றதைச் செய்து வருதல்போல, எந்த நாட்டிலிருந்தாலும், தமிழர்கள் அந்த நாட்டு மொழியைக் கற்பதோடு தாய்மொழியை மறவாது கற்றுவர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினர். காரியதரிசி ஸ்ரீ ஆர். கிருஷ்ணன் அவர்கள் நன்றி கூறினர்.

அமரகவி பாரதி

4-1-57ல் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தில் பாரதிபற்றிப் பேசினர். அப்போது பாரதியின் கவிதைகள் யாவருடைய உள்ளத்தையும் தொடுவதால் அவர் அமரகவி என்று போற்றப்படுகிருரென்றும், அவருடைய கவிதைகளில் தெய்வத் தன்மை மலிந்து கிடக்கின்றதென்றும் எடுத்துக் கூறி, பாரதியார் ஒரு வேடனின் உள்ளததிற் புகுந்து எப்படி அவனது வாழ்க்கையை நாம் காணுமாறு செய்தார் என்பதைத் 'திக்குத் தெரியாத' பாட்டின் மூலம் எடுத்துரைத்தார்.

குறள் விழா

6—1—57 மாலை இரண்டு மணியளவில் திருக்குறள் இன்பத்தைப்பற்றி நேரம் போவதே தெரியாமல் அற்புதமான சொல்மாரி பொழிந்தார். திரு கா. பொ. இரத்தினம் திருக்குறள் செவிக்கின்பம் தருகின்ற பாடல்கள் மாத்திரமல்ல. அது வாழ்க்கை நூல். எம்மதத்தினையும் சாராது அந்த அரியநூலைத் தந்த பெரியாருக்கு ஆண்டுதோறும் ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலும் விழாக் கொண்டாட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினர்.

கடித.

# ஸ்ரீ சங்கராச்சாரியாரின் சமயப் பணித்திறன்

---o---

## சைவ மக்களும் சைவ மடங்களும் கைக்கொள்ள வேண்டிய கடன்

**ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்**

செந்தமிழ் மொழி வழங்கும் தமிழகத்திலே தென்னுட்டிலே மேற்குக் கடற்கரை அருகில் திருவாங்கூர் என்ெருரு நகர் உளது. அந்நகரில் காலடி என்னும் கிராமத்தில் சைவ குலத்திலே ஸ்ரீ சங்கராச்சாரியார் பிறந்தனர். இவர் பிறந்த காலத்தில் மலையாள தேசத்தில் தர்மங் குன்றி அதர்மம் தலையெடுத்துள்ளது. இது கி.—பி. எட்டாம் நூற்ருண்டளவிலாகு மென்பர். இதே நிலைமை வடஇந்தியாவிலுள்ள வங்காள தேசத்திலும் இருந்தது. இவ்விரு தேசத்தாரும் மக்களை மிருகங்களாக அப்பொழுது மதித்து நடந்தனர். சங்கரர் கல்விபயின்றபின் மிக்க இளமையிலே வட இந்தியா போந்தனர். அதனுல் இவர் தென்னுட்டுக்குத் தொண்டு செய்ய முற்படவில்லை.

வடநாடு சென்ற இவர் சந்நியாச துறவுபூண்டு காவியுடை தரித்து நாடெங்கும் அத்வைத மார்க்கத்தைப் போதித்து வந்தார். இவருடைய காலத்தில் வட இந்தியாவில பௌத்தமதம் பரவி இருந்தது. இதனுல் இவர் பௌத்த மடங்களின் ஊழல்களைக் கண்டித்தார். வைதீகக் கிரியைகளையும் கண்டித்தார். இளமையில் துறவு பூண்ட வீரம் சங்கரருக்கு உரியதென்பர். இது தமிழன் வீரமாகும். இத்தகைய வீரத்துறவை இக்காலம் யாழ்ப்பாணம் இலக்கணம் முத்துக்குமாரசுவாமிகள் தமிழகத்தில் வாழ்ந்து காட்டி நாவலர் வழியில சைவசித்தாந்தத்தைப் பரப்பினர். ஆகவே துறவு வீரமும் தமிழருக்குண்டு எனலாம். சங்கரர் மிக விவேகமும் தங்கருத்தைத் தர்க்கித்து நிலைநாட்டும் பேராற்றலும் படைத்தவர். இவர் வேத உபநிஷத்துக்களின் சிலவற்றிற்கு பாடியம் செய்து அப்பாடியத்தில் பௌத்தம முதலிய மதங்களைக் கண்டித்து ஏகான்ம வேதாநத மதத்தை நிலைநாட்டினர். ஸ்ரீ சிவஞான சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற பெருமக்கள் சங்கரர் நிலைநாட்டிய மதத்தையும் ஏனைய மதங்களையும் மறுத்துச் சுத்தாத்துவித சைவசித்தாந்த மதத்தை நிலைநாட்டியிருக்கிருர்கள். சங்கரர் பாடியத்துக்கு வழிநூல், சால்பு நூல்கள் பலநூற்றுக் கணக்காக வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வெளிவந்திருக்கின்றன இன்றும வெளிவருகின்றன. இதனுல் சங்கரமதம் உலகத்தில பிரசித்தி பெற்றிருக்கின்றது. அதுபோல எங்கள் தவமணி விளககு ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் அருளிய சிவஞான பாடியமும் பல்வேறு நூல்களாக விரிந்து சர்வ மதங்களுக்கும் தலைசிறந்து விளங்கும் வண்ணம் வைதிகசைவ சித்தாந்தம் அரசாங்கத்தமர்ந்து வீற்றிருப்பச் சைவப்பேரறிஞர்கள் சைவசித்தாந்த முழக்கம் செய்யவேண்டும். சங்கர மதத்தைத் தழுவிய சுவாமி விவேகானந்தர் வேதாந்த மதத்துக்கு மேலநாட்டில் கர்ச்சனை செய்தமை போன்று சைவத் தமிழர்கள் சித்தாந்த கர்ச்சனை செய்ய வேண்டும். இது நிற்க,

சங்கரர் தம் மதபோதனைகளால் வட இந்தியாவில பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். இவர் போதனைகளால் ஆதியில் இருந்த பௌத்த ஆலயங்கள எல்லாம் பின்னுல் இந்துக் கோயில்களாக மாறின. பௌத்தர்கள் பிற்காலத்தில் இந்துமதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கலானுர்கள் இதனுல் பௌத்த மடங்களில் மக்கள் புத்த குருமாராய்ச் சேரும் நிலைமையும் அருகி இருந்தது. சங்கரர் சிவபூசையும் செய்பவர். சக்தியையும் வழிபடுபவர் இதற்குச் சிவானந்தலகரி ஆதாரம் என்பர். அதுவுமல்லாமல் சங்கரர் வடஇந்தியாவில் சமயச் சீர்திருத்தம செய்ததுமல்லாமல் மடங்களும் நிறுவியுள்ளார்கள். இந்த மடங்கள் அத்வைதத்தையே பிரசாரம் செய்து உபநிடதக் கருத்துக்களின் உயர்வை எடுத்துக் காட்டுவதே பீடாதிபதியின் கடமையாய்க் கொண்டுள்ளன. இந்த மடங்கள் சிருங்கேரி குமபகோணம முதலிய இடங்களில் இன்றும் இருக்கின்றன. இவற்றின் கீழும் பல மடங்கள் இருக்கின்றன. இவைகள் இந்து

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
இல M. B. 593

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு சின்னத்தம்பி அமிர்தலிங்கம் — வழககாளி

சுதுமலை தெற்கு சுதுமலை சின்னையா அருணசலம். — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன்கீழ்க்காணப்படும ஆதனம் 1957-ம் ஆ வெபுறுவரி மீ 23-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிகளுள் வினறு பிரசித்தஏலததல் எல ஞல் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 2300 இதில் முதல் ரூபா 2000க்கு 24-10-1955 ஆ துவக்கம் 8-2-56 வரையும் ஞ 1 க்கு 100 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் மொத்ததொகைக்கு இறுக்கும் திகதி வரையும் முறைமைமான கோட்டு வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 176-30-ம் (தீர்வை வரை பொறுத்த செலவு ரூபா 120 40 கமிஷன் விடச்செலவு ரூபா 28-32 இனிமேல் வருஞ்செலவு ரூபா 27-58) குறித்த கோட்டுச் செலவில் எதிரி இறுத்த தொகைரூபா 100/= கழித்து மிகுதியும்

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிமேற்கு மானிப்பாய்க கோவிற்பற்று சுதுமலை இறை பெரிய சீமாவும் மறுபிரிவுகளும் பூவராயன் சீமாவும் குப்பைச்சி சந்திரன் சீமாவும் நிலபரப்பு 9 1/2 அளவின்படி நிலபரப்பு 10 ம் குளி 17 3 4 ம் கிணறும் கொட்டில் வீடும் வான்பயிர்களும் பனைகளும் வடலிகளும், எலலை கிழககு ஆறுமுகம் சின்னையபிள்ளையின் ஆதனம் வடக்கு மேற்சொல்லப்பட்ட சின்னையபிள்ளைக்கும், சின்னக்குட்டி கந்தையாவுககும் கந்தையா வைத்திலிங்கம் கைம்பெண் பொன்னுவுக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு இளையதம்பி கைம்பெண் செல்லத்துக்கும் மறுபெயர்களுக்கும் உரிய ஆதனங்களும் ஒழுங்கை முகப்பும் அருணசலம் இராசேஸ்வரிக்கும் உரியஆதனமும, தெற்கு மேற்சொல்லப்பட்ட இராசேஸ்வரியின் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு ஏழுடன் நூற்றில் நாற்பததைந்தும் (பரப்பு 7-ம் தசம் 45 ம்) இதைச் சேர்ந்தவைகளும்,

பெ. மத்துச்தம்பி
வெந்திஸ் கமிஷனர்

சுதுமலை தெற்கு
மானிப்பாய்
1957-ம் ஆ ஜனவரி மீ 16 உ
M. 451 25-1 ( ரு 100 )

### இலங்கை இந்தியர் நிலைமைபற்றி இந்திய கருத்து

—0—

ஸ்ரீபண்டாரநாயக முதல் மந்திரியாய் வந்தபின், பண்டித நேரு அவர்களுக்குப் பல புகழ் மாலைகள் சூட்டி அவருடைய வெளிநாட்டுக் கொள்கைகளைப் போற்றி அவற்றைத் தாமும் கடைப்பிடிப்பதாக அவர்கூறினர். இவற்றைக் கண்ட இந்திய மக்கள் இலங்கை இந்தியர் நிலைமை இனித் திருந்துமென்று எதிர்பார்த்திருந்தனர். அப்படி நிகழாமை கண்டு இப்பொழுது ஏமாற்றம் அடைந்துள்ளனர். சென்ற ஞாயிறு வெளியான சென்னை இந்து நாளிதழ் இக்கருத்தைத் தெளிவாகக் கூறுகின்றது.

#### நேயர்கள் நெஞ்சம்

### கிளிநொச்சிப் பிரசவ விடுதியால் மதமாற்றமா?

கிளிநொச்சியில் ஒரு பிரசவவிடுதியை, கரைச்சிக் கிராமச்சங்கம் அரசாங்க மானியத்தில் கட்டி அதை நிர்வகிப்பதற்கு யாழ்ப்பாணம் பிசுப்பாண்டவரிடம ஒப்படைத்துள்ளதாகத் தெரிகிறது. இது மதமாற்றம் செய்வதற்கு உதவியாகும். இதையிட்டுக் கிளிநொச்சிப் பகுதியில் பெரும் கிளர்ச்சியும் உண்டு. உருத்திரபுரம் மாதர்சங்கக் கூட்டத்தில் ஒரு கண்டனத் தீர்மானமும் நிறைவேறியுள்ளது.

பல சமயத்தவர்களும் இருக்கின்ற கிளிநொச்சிப் பகுதியில் குறித்த பிரசவ விடுதியை அரசாங்கமே நிர்வகிப்பது நியாயமாகும். இதைவிடுத்து அரசாங்கப் பணத்தில்கிறிஸ்தவ பிரசாரத்துககும் மதமாற்றத்துக்கும வசதி செய்வது நியாயமல்ல. மககளிடையே அமைதியும் ஒற்றுமையும் ஏறபடுவதற்காக யாழ்ப்பாணப் பிசுப்பாண்டவர் அவர்கள் குறித்த பிரசவ விடுதியை தாம ஏற்காது விடுவாராக.

இங்ஙனம்,
சி. க. வேலாயுதபிள்ளை

# வணக்கத்துக்குரியது தாய்மை

## தருமவிருத்தியேதிருமணக்குறிக்கோள்

புராதன இந்திய கலாச்சாரத்தில் பெண் ஒரு தனியிடம்பெற்றிருந்தாள். தாய்மையே பெண்ணின் இலட்சியமாயிருந்தது. தாய் வணக்கத்துக்கும் வந்தனைக்கும் உரியவளாய் விளங்கினள். அவளைச் சுற்றியே குடும்பம் வளர்ந்து ஆசிகளுடன் சீர் பெற்றுச் சிறந்தது. உடற்கூற்றுச் சாத்திரமுறையிற்பெண் படைக்கப்பட்டமைபற்றி ஓர் கருத்துள்ள போதிலும் ஆன்மார்த்த முறையில் கணவன் மனைவி உறவை உயர்த்தி, உடலுறவு இரண்டாந் தானத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. உடலுறவு புனிதப்படுத்தப்பட்டு ஒரு தெய்விக கடமையாக உயர்த்தப்பட்டுள்ளது. திருமணமானது உடலுறவுக்கான ஒரு அனுமதியாகக் கருதப்படாமல், தர்மத்தின் விருத்திக்கான ஒரு சமுக-சமயப் புனிதக் கூட்டுறவாகக் கருதப்பட்டது. மனிதனுடைய ஆன்மார்த்தச் சிறப்பின் பொருட்டு திருமணத்தில் உடலொழுக்கக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படடுள்ளன. பெண்ணைப்பற்றியும், திருமணத்தைப்பற்றியும் பரம்பரையாக எமக்கிருந்து வந்த கொள்கைகளை மேற்குநாட்டுக் கலாச்சாரச் செல்வாக்கு மாற்றியுள்ளது.

இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு, பொருளாதாரத் துறையிற் சுதந்திரமான ஒரு தனி வாழ்க்கையை நடத்தப் பெண்கள் ஆவல் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். பொருளாதார, தேக, விடுதலைத் திருப்திக்காக வீடும் குடும்பமும் தியாகம் செய்யப்படுகின்றன. சமுக நன்மைக்கு இல்லக் கிழத்தியையே முதற்கண் இன்றியமையாத தேவையாக இந்திய கலாசாரம் கருதியது. இல்லத்திலிருந்து இல்லக் கிழத்தி அகன்றுவிடுவதால் அவளது தாய்மை உணர்ச்சி கொல்லப்படுகின்றது. குழந்தையின் வளர்ச்சிக்குத்தேவையான அன்புத் தளை குன்றி, திருமணம் வெறும் வம்ச விருத்தியாகி விடுகின்றது. எழுச்சி பெறும் ஆசியா பெண்ணை அவளுக்குரிய இடத்துக்கு மீண்டும் அழைத்து வந்து இல்லத்தின் சோதியாகவும் பெருமையாகவும் அவளைப் பிரதிட்டை செய்தல் வேண்டும் என்று கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் ஆசிய எழுத்தாளர் மகாநாட்டிலே பேசும்போது கூறினர்.

### சைவப் பிரசங்கங்கள்

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் 4-1-57 வெள்ளிக்கிழமை மூற்பகல், இலவச சைவப் பிரசாரகர் அராலி திரு. வே. கந்தையா அவர்கள் பொய்சொல்லுதலால் உண்டாகும் தீமைகள் பற்றித் தகுந்த ஆதாரங்காட்டி ஓர் சைவப் பிரசிங்கங்கஞ் செய்தார்.

குறித்த பிரசாரகர் உசன் கந்தசுவாமி கோயிலில் 11-1-57வெள்ளிக்கிழமை இரவு சுந்தரமூர்த்தி நாயனர் என்னும் பொருள் பற்றி மற்றொரு சிறந்த பிரசங்கஞ் செய்தார்.

— கடித

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராசாக்ருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 27—1—57 —— 2—2—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உமக்கு இந்தவாரம் மனச்சமாதானமிருக்க மாட்டாது. புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரா. நண்பருடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு, தேகசுகம் இப்பொழுதும் சிக்கலாகவே யிருககின்றது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பக் கருமங்கள் ஒழுங்கு பண்ணப்படாமலே இன்னமும் தொடர்ந்திருக்கும். ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். சண்டைகளுக்கிடமுண்டு வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், தனலாபம் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

முதல் அரைவாரம் ஒரு அளவுககு நல்லாயிருக்கும். ஆரம்ப இடைஞ்சல்களின் பின் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தியடைவீர் தேக சுகவீனங்களுக்கும் பண நெருககடிகளுக்கும் இடமுண்டு. செவ்வாய் பிற்பகல் புதன்வியாழன் எல்லாவற்றிலும் மிகப்பழுதானவை. வார இறுதி சிறிது ஆறுதலைத் தரும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

தளப்பமான வாரம் குடும்பச் சலனங்கள் உம்மை அதிகம் நிலைகுலைக்கும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும் கடைசி இரு நாட்களும் உமக்கு அதிக கோபத்தை உண்டாக்கக்கூடும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். பகைவரை வெல்லுதலும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். பணத் துறையில் சில திருத்தங்களுக இடமுண்டு. ஆனுல் இனத்தவர்களுடன் சண்டைகளுககிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஒரு அளவுக்கு நல்ல வாரம். உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தியெய்தக்கூடும். ஆனுல் வேலை அதிகமாயிருக்கும். ஆறுதலுமிருக்கமாட்டாது. தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வழக்கத்திலும் பார்க்க இந்த வாரம் செலவு கூடுதலாயிருக்கும். குடும்பச் சூழலில் வாக்குவாதங்களுககும் சண்டைகளுக்கும் இடமுண்டு. தேககசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் இந்தவாரம் நீக்கக்கூடியதா யிருக்கும். தனலாபமும் புகழும் நிச்சயம் ஆனுல் தேககசுகம் நல்லாயிருக்க மாட்டாது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. சமுகத்துறையில் நல்லவாரம். உம்முடைய நண்பர்கள் இனத்தவர்களிடமிருந்து நீர் அதிகம் இலாபம் பெறக்கூடியதாயிருக்கும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உத்தியோக கருமங்களுக்கு அல்லது வியாபாரக் கருமங்களுக்கு ஒரு நல்ல வாரம். நீர் உம்முடைய பகைவரை வெல்லுவீர். வெல்லுதலோடு புது முயற்சிகளிலும் சித்தியடைவீர். ஆனுல் சிறிது காலத்துக்குத் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இந்தவாரம் தனலாபம் நிச்சயம். உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக் கூடியதாயிருக்கும். அறியாதவர்களும் அன்னியரும் அதிக உதவியாயிருப்பர்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

பிதாவழி இனத்தவர் உமக்கு இந்தவாரம் சிறிது கோபம் மூட்டக்கூடும். ஆனுல் பணத்துறையில் நல்லவாரம். சமுகசித்தியும் புகழும் நிச்சயம்.

உ

# ஓர் விண்ணப்பம்

மறவன்புலோவிலுள்ள கோயிலாக்கண்டி சிவன் கோயில் அநேக வருடங்களாகக் கிலமடைந்து பூசை முதலிய நியமங்கள் இன்றியிருக்கின்றது. அதன் தர்ம கர்த்தாக்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாருக்குச் சாதனமூலம் அக் கோயிலின் பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதன் புனருத்தாரணத்துக்கு ரூ. 8000/= வரை தேவை. ஆகவே சைவச் சீலர்கள் யாவரையும் இச்சிவ கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

த. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்

முகாந்திரம் இ. பொ. இராசையா,
தனதிகாரி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஆ. தனபாலசிங்கம்,
செயலாளர்.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் முலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std 14 சிருப்பர்


## கொழும்பு நகரசபைத் தலைவர்

ஐக்கிய தேசியக் கட்சியினராகிய ஸ்ரீ வீ. ஏ. சுகததாச கொழும்பு நகரசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (சிங்கள) மக்கள் முன்னணி அபேட்சகருக்கு 10 வாக்குகளும் இவருக்கு 19 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஸ்ரீ ஈ. வேலாயுதம் உப தலைவராகப் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டார்.

## சமய தாபகர்கள் யாவரும் ஆசியாவில் தோன்றினர்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மனித வர்க்கத்தின் ஆன்மார்த்தப் பெருமையைச் சரித்திர காலந்தொட்டு ஆசியா உலகுக்கு எடுத்து விளக்கி வந்திருக்கின்றது. உலகிலுள்ள சமயங்களின் தாபகர்கள் யாவரும் ஆசியாவிலேயே அவதரித்தார்கள். இந்த மகான்களின் வாழ்க்கையில் திகழ்ந்த ஆன்மார்த்தக் கொள்கைகளை மீண்டும் உலகுக்கு எடுத்துவிளக்குவது இன்று எழுச்சி பெற்றுவரும் ஆசியாவின் புனித கடமைகளில் ஒன்றாகும் என்று கூறினர்.

## சங்கராச்சாரியரின் சமயப்பணித் திறன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

சமயத்தை நன்றாகப் பாதுகாத்துத் தொண்டு புரிகின்றன, சிருங்கேரி குருபீடங்கள் இன்றைக்கும் தங்கள் குருமரபு நெறி பிறழாமல் தாங்கள் இருக்க வேண்டிய இடங்களில் இருந்து அரசாங்க ரீதியிலோ அல்லது வேறு எந்த வகையிலோ பெரிய இலௌகிக அதிகாரமுடையவர்களுக்கு அடிபணியாது ஆண்டவன் தொண்டைச் செய்து வருவது போற்றுதற்குரியதாகும். தென்னாட்டுச் சைவ மடங்கள் இவ்வாறு செய்கின்றனவா? இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. மடங்கள் எல்லாம் மக்களின் வாழ்க்கை, சமயச் சீர்திருத்தமுறச் செய்யத்தக்கனவாய் நடக்க வேண்டும். சைவ மக்கள் இத்துறையிற் சிரத்தை காட்டவேண்டும். இவ்வாறு இந்துமதப் பொதுஸ்தாபனங்கள் எல்லாம் செவ்வனே நடைபெற்றுச்சமயச் சீர்திருத்தங்கள் செய்தல் இன்று அவசிய தேவையாயிருக்கின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
தெல்லிப்பழை கிழக்கு சின்னப்பு தப்பிப்பிள்ளை
இல. M. B. 444

வழக்காளி

எதிராக

1 வண்ணார்பண்ணை கிழக்கு அத்தியடி எஸ். எஸ். நாகலிங்கம்
2 யாழ்ப்பாணம் சப்பல்வீதி ஓறியன்றல் பாங் ஒவ் மலாயா லிமிட்டெட்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 444-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1957 ஞு மாசி மீ 23 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 7462-50 ம் இன்னும் ரூபா 5000-க்கு 26-8-55 தொடக்கம் 16-2-56 வரையும் 100 க்கு 9 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு தீர்வைத் தகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியையும் கோட்டுச் செலவு ரூபா 271-76.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை பீகுளம் கரையும் பீகுளம் தலைமடையும் நெற்பரப்பு 8 5/16 மேற்படி இறை பீக்குளம் கரை பீக்குளம் தலைமடை நிலப்பரப்பு 14-ம் குளி 15 1/4 இரண்டும் ஒருங்கு சேர்ந்து ஒருதுண்டுக் காணியாய் இருக்கிறது. இதன் விஸ்தாரம் நெற்பரப்பு 30 குழி 7. ஆனல் உலாந்தா மேஸ்தர் யே. டி. வீரசிங்கம் என்பவரால் விஸ்தரிக்கப்பட்ட 4-4-1943 ல் கொண்ட 1953-ம் இலக்க பிளானின்படி நெற்பரப்பு 29 எல்லை கிழக்கு நாகலிங்கம் இராசையா பெண் ருக்மணி வரதாம்பிகைக்கும் எஸ். எஸ். நாகலிங்கத்துக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு பொன்னையா சண்முகத்துக்கும் எஸ். எஸ். நாகலிங்கத்துக்கும் உரிய ஆதனங்கள் மேற்கு நடராஜா வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கும் ஏ. தில்லையம்பலத்துக்கும் உரிய அதனங்கள், தெற்கு சவிரிமுத்து கைம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும் பதிவு இல. D 170]313.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
9-1-57.
M 453 25-11-56 (து 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை இளக்கு இராமப்பிள்ளை இராசையா
கைம்பெண் கனகம்மா
வழக்காளி.
இல. 11464

எதிராக

(1) நாவாந்துறை றோட் மொகமத மொகிடீன் மொகமெட் யூசோவ்
(2) தெல்லிப்பளை மயிலிட்டி தெற்கு வயித்திலிங்கம் கந்தையாவும் பெண்
(3) நாகம்மாவும்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11464ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஞு பங்குனி மீ 7உ வியாழக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "புகடி" பர. கி. இ. 1 7/8 ப. கல்வீடும். செய்பயிர்களும் அங்கு இருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு பக்கீர் பாவா மிஸ்கினின் உருத்தாளருடைய ஆதனம். மேற்கு தண்ணீர் ஓடும் வாய்க்கால், தெற்கு மீரு சைகிப் காசிம் மொகிடீனும் மொகமெற் சுல்தான் பெண் காடெர் பிபியினுடைய ஆதனம் இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம், 11-1-57.
M 452 25-1-57. (து 200)


## புதிய வெளியீடுகளும் புதிய பிறநூல்களும்

சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன


| பள்ளிக்கூடப் பாவிப்புக்குரியவை:— | ரூ ச. |
| --- | --- |
| Advaita Vedanta (ஆங்கிலம்) ... | 3 00 |
| ஒலிவரப்புக் கலை —சோ. சிவபாதசுந்தரம் ... | 6 00 |
| தமிழ் இலக்கிய வரலாறு — V. செல்வநாயகம் ... | 4 25 |
| பொது அறிவுக் களஞ்சியம் வினவும் விடையும் (புதிய முறை) — சி. குலரத்தினம் ... | 90 |
| பொது அறிவுப் பயிற்சி — சி. குலரத்தினம் ... | (0 |
| எண் பயிற்சி (நாயகம்) 5ம் வகுப்பு ... | 65 |
| பூகோளப் படப் பயிற்சி 6ம் வகுப்புக்குரியது ... | 65 |
| ,, ,, 7ம் ,, ... | 75 |
| கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப்படலம் விருத்தியுரை (கழகப் பதிப்பு) | 2 00 |
| சுகாதார தீபம் | 2 50 |
| மாணவர் சரித்திரக்காட்சி 1ம் பாகம் 6ம் வகுப்பு — வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை ... | 2 00 |

பச்சையப்பன்கல்லூரிப் பேராசிரியர் பரமசிவானந்தம் எழுதிய நூல்கள்

| | |
| --- | --- |
| சாதி வேறி ... ... | 1 25 |
| பாசம் ... ... | 2 00 |
| வாழ்வுப் பாதை ... ... | 4 00 |
| துன்பச் சுழல் ... ... | 1 25 |
| கறைபடிந்த உள்ளம் ... ... | 1 50 |
| கண்டதும் கருத்தும் ... ... | 1 25 |
| தமிழன் கண்ட மலாயா ... ... | 2 25 |
| காப்பியக் கதைகள் ... ... | 5 00 |
| பெண் ... ... | 1 75 |
| மலாயா சொற்பொழிவு ... ... | 1 75 |

பரமசிவானந்தம் நூல்கள் 10ம் ஒரேமுறையில் வாங்குவோருக்கு 15 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்





வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 25-1-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.